RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt23112

OPEN ACCESS

# சிலப்பதிகாரத்தில் காணலாகும் நாடகக் கூறுகள்

வெ. முத்துலட்சுமி [அ, *]

[அ] தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர், ஜி.டி.என். கலைக் கல்லூரி (தன்னாட்சி), திண்டுக்கல்-624005, தமிழ்நாடு, இந்தியா

# Theatrical Elements in Cilappathikaram (An Epic)

**V. Muthulakshmi [a, *]**

[a] Department of Tamil, G.T.N. Arts College (Autonomous), Dindigul-624005, Tamil Nadu, India

* Corresponding Author: profmuthulakshmiv@gmail.com

Received: 02-08-2022
Revised: 18-10-2022
Accepted: 05-11-2022
Published: 01-12-2022

**ABSTRACT**

Silappathikaaram is a short epic story, it has written by the pioneer of Tamil epic writer Elangovadikal. This story begins with Kovalan and Kannagi marriage life, unfortunately a beautiful dancer Maadhavi, who interefere their life and kovalan living with Maathavi. Later Kovalan and Maadhavi separated by their conflict and Kovalan joined with Kannagi to reached the Madurai. Where he wrongly punished by the King, Kannagi heard news of Kovalan murder and cursed the Madurai.This story opens in happy mood and ends in sad feeling,it has pleasure, morose and mockery and tragedy. Those are coming vice versa. Even though Kannagi anklet rings (silambu) is the reason for happy beginning and sad ending in dramatic way.This short epic shows Maadhavi's eleven types of dance and songs. Which songs reveal and attribute mono-song method of Vaettuvary, Aaitchiyar Kuravai.

**Keywords:** Kannagi, Kovalan, Maadhavi, Silappathikaaram

## முன்னுரை

நாடகக் காப்பியம் என்றழைக்கப்படும் சிலப்பதிகாரம் தமிழின் முதல் காப்பியம் ஆகும். இது இன்று திரைப்படமாக எடுக்கப்பட்டும், கிராமப்புறங்களில் நாடகமாக நடிக்கப்பட்டும் வருகின்றன. ஒரு நாடக வடிவம் கொள்ளுவதற்குரிய கட்டுக்கோப்பைச் சிலப்பதிகாரம் முழுமையாகப் பெற்றுள்ளது.

"நாடகமேத்தும் நாடகக் கணிகையொடு

வால சரிதை நாடகங்களும்"

என நாடகம் என்ற சொல்லை, நடனமில்லாமல் நாடகம் என்ற பொருளிலே சிலம்பு வழங்குகிறது. சிலப்பதிகார நாடகக் காப்பியத்திற்கு பிரதானமான கதை மாந்தர்கள் அனைவரும் பொருத்தாமாக உலா வருகின்றனர். இக்காப்பியத்தில் நாடகக்கட்டமைப்பு பாத்திரவார்பு, நாடகச்சூழமைவு இன்பியல், துன்பியல் முதலான உணர்வுகள் குறித்து சிலப்பதிகாரம் முழுகதையோட்டத்துடன் ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைந்துள்ளது (Swaminatha iyer, 2018).

## நாட்டு வளமைகள்

ஒரு கூத்துப் பனுவலில அரசன் தனது 'நாட்டு வளமைகள்' பற்றி மந்தியிடம் கேட்பதும், மந்திரி அவ்வளமைகளை அரசனுக்கு எடுத்துக்கூறி வர்ணிப்பதும் குறிப்பிடத்தக்க நாடகத் தொடக்கமும்

அறிமுகமுமாகும். இக்காட்சி விபரிப்பைத் தமிழக - ஈழத்துக் கூத்துக்களில் காணலாம். இவ்வகை விபரிப்புக்களைச் சிலப்பதிகாரமே தமிழ்நாடகப் பாரம்பரியத்திற்குத் தந்துள்ளது.

## புகார் நாட்டின் நகர்வளமும் அதன் சூழமைவும்

வங்கக் கடற்கரை ஓரத்தில் அமைந்த பண்டைய வரலாற்றுச் சிறப்புமிக்க எல்லா வளமும் கொழிக்கின்ற பூம்புகார் நகரம் திகழ்கிறது. எனினும் சிலப்பதிகாரம் குறிப்பிடும் பூம்புகாரின் வருணனை நோக்கும்போது இந்நகரிலுள்ள பொன்னியாற்றுப் பூஞ்சோலையில் மயிலாட, குயில்கள் இசைபாட, மரம் செடிகொடிகளிலும் அழகுற மலர்ந்து மணங்கமழும் மலரில் தேன் வண்டுகள் ரீங்காரமிட்டுக்கொண்டு தேனை உண்டு திளைத்து இன்புற்றிருக்க, ஆற்றிலுள்ள மீன்கள் அங்குமிங்குமாய் துள்ளிக் குதித்துக் கொண்டு மலரை ஆடையாய் போர்த்து கண்ணுக்கு இனியதாய் அழகாய் காவேரியாறு சென்றது. அவ்வாற்றங்கரையில் மருத நிலத்தைப் பண்படுத்தி உழவோர் பயிர் செய்யும் ஒலியும், கால்வாய் வழியாக விரைந்து செல்லும் நீரின் ஒலியும், அந்நீரில் மூழ்கி மகிழ்ந்து விளையாடுவோரின் ஒலியும் எங்கும் ஒலித்துக்கொண்டிருந்தது.

“பூம்புகார் போற்றுதும் பூம் புகார் போற்றுதும்

வீங்குநீர் வேலி யுலகிற் கவன்குலத்தோ

ஓங்கிப் பரத்தொழுக லான்”

இவ்வாறான அந்நகரில் ஒரு பக்கமாய் விளங்கிய மருவூர்ப்பாக்கத்தில் மாட மாளிகைகள் மாண்புற விளங்கவும், கண்ணுக்கு எட்டாத தூரங்கள் வரை செல்வந்தர்கள் வாழக்கூடிய குடியிருப்புகளும், பல நாடுகளில் இருந்து வருகைபுரிந்து கொண்டிருக்கக் கூடிய அயலவர்கள் இந்நாட்டை விட்டுச் செல்ல மனமில்லாமல் தங்கி இருக்கும் காட்சியும், நாளங்காடி, அல்லங்காடி என இரவும் பகலும் விண்மீன்கள் போன்று வீதிகள் தோறும் கடைகளும், பல நறுமணங்கள் தரக்கூடிய சாந்தமும், பூவும் விற்கக் கூடியவர்கள் சுற்றித் திரியும் நகர வீதியும். அவ்வீதிகளில் பட்டாலும், கம்பளத்தாலும், பருத்தி நூலாலும் நுண்ணிய முறையில் நெசவு செய்யப்படும் இருப்பிடங்களும் சிறந்து தோன்றுகின்றன. அதுமட்டுமில்லமால் பல ஆபரணங்கள் கொண்ட ஆரம், அகில், பொன், மணி, முத்து நிறைந்த வணிகர் வீதியும், நெல், புல், வரகு, திணை முதலிய கூலம் குவித்த கூல வீதியும் நிறைந்து காணப்படுகின்றன (Swaminatha iyer, 2018).

பூம்புகார் நகரில் அரசாளும் மன்னர் வீதியும், தேரோடு வீதியும், வணிகரின் மாட மாளிகை வீதியும், மறையோர் வாழும் மங்கள வீதியும், வேளாளர் வாழும் வீதியும், காலக் கணிதர் வீதியும், யானை வீரர், குதிரை வீரர், தேர்ப்பாகர் ஆகியோர் வாழும் வீதிகளும் விளங்கித் தோன்றுகின்றன. இன்னும் கடல் வழியாகவும் தரை வழியாகவும் நடந்த வாணிகத்தால் வளம் மிகப் பெருகி,

“பொறைஒருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவர்க்கு

இறைஒருங்கு நேர்வது நாடு”

என்று நாயனார் அருளியவாறு முழங்கு கடலாற் சூழப்பட்ட உலகம் முழுவதும் ஒருங்கே திரண்டு வந்தாலும் வழங்கக் குறையாத வளமும் பொருளும் உடையதாய் அந்நகரம் விளங்கிற்று (Swaminatha iyer, 2018).

பூம்புகாரில் நீர்வளம் நிறைந்த நாடாக பொழியக்கூடிய மழைநீரானது கடலில் கலக்காதவாறு சோழமன்னன் ஆற்றுக்குக் கரை எழுப்பி, அணைகளை எடுத்து, தடுப்பணை அமைத்து, வருடந்தோறும் கால்வாய்களை செப்பனிட்டு மக்களுக்காகவும், நாட்டின் வளத்தைப் பெருக்கவும், பல்வேறு நாடுகளோடு தொடர்புகொண்டு கடல் கடந்த வாணிபத்தையும் செய்தவர்கள் சோழர்களே. இவர்கள் இக்காவிரிப் பூம்பட்டினத்தை தனது அரசுக்கான தலைமை நகரங்களுள் ஒன்றாக அமைத்துக் கொண்டனர். இமயம்வரை படை எடுத்துச் சென்று பகைவர்களை வென்று இமயமலையில் தன் புலி சின்னத்தைப் பொறித்த பெருமை இவ்வரசையே சாரும். பிற நாடுகளில் இருந்து கைப்பற்றிய பொருள்களை தன் பட்டிமண்டபத்தையும், தோரணவாயிலையும், முத்துப்பந்தலையும் அழகுபடுத்தினான் என்பதை

இளங்கோவடிகள் நாடகத்திற்கான நகர்வள அனுகுமுறையுடன் தனது சிலப்பதிகாரத்தில் விவரிக்கின்றார்.

"இருநில மருங்கிற் பொருநரைப் பெறாஅச்

செருவெங்காதலின் திருமாவளவன்

மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்

கோனிறை கொடுத்த கொற்றப்பந்தரும்

மகதநன்னூட்ட வாள்வாய்வேந்தன்

புகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண்டபமும்

அவந்திவேந்தன் உவந்தனன் கொடுத்த

நிவந்தோங்கு மரபில் தோரணவாயிலும்

பொன்னினும் மணியினும் புனைந்தன வாயினும்"

என்று குறிப்பிடுகிறார் (Swaminatha iyer, 2018).

## பாண்டிய நாட்டின் நகர்வளமும் அதன் சூழமைவும்

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பழமையான நாடு பாண்டிய நாடாகும். இந்நாட்டிலுள்ள வையையாற்றைக் குறிப்பிடும்பொழுது சோழநாட்டின் சிறப்பைக் கூறுவதைப் போலவே பாண்டிய நாட்டின் வளமையையும் இளங்கோவடிகள் காட்சிப்படுத்துகிறார். அதுமட்டுமல்லாது மன்னர்களின் மாடமாளிகைகள் கொண்டு அழகுற அமைந்த வீதிகளும், ஒவ்வொரு படைகளின் வீதிகளும், வேதங்களை முறையாகக் கற்றிந்த அந்தணர்களின் வீதிகளும், ஏனையோர் வாழும் வீதிகளும் அமைந்துள்ளன. இவ்வாறாக ஒருபக்கம் இருக்க தூங்காநகரம் என்றழைக்கின்ற நகரில் இரவு, பகலாக நாளங்காடி, அல்லங்காடிகளில் விலைமதிப்புமிக்க பொருள்களும், வாசனைத் திரவியங்களும், அழகுபொருந்திய ஆடை கடைவீதிகளும் காணப்படுகின்றன. மக்கள் திரட்சியாக திரண்டவண்ணம் இந்நகரை வலம் வருவதை இளங்கோவடிகள் ஊர்காண் காதையில் விளக்கப்படுத்துகிறார்.

இவ்வாறு பூம்புகாரையும், பாண்டிய நாட்டையும் விபரிக்கும்முறை, அதன்தன்மை, அதிலுள்ள வர்ணிப்பின் உத்திகள் முதலானவை பிற்காலத்தில் கூத்தெழுதிய புலவர்களால் தமது நாடகப் பனுவலாக்கங்களில் உட்புகுத்தியுள்ளமை கவனத்திற்குரியது. இலங்கையில் ஆடப்படும் தென்மோடிக் கூத்துப் பனுவலாக உள்ள அலங்காரரூபன் நாடகத்தில் அதிவீரசூரராசா தனது மந்தியிடம் நாட்டு வளமையைக்கேட்க அவன் கூறும்முறை அறிதலுக்குரியது.

"மாதமொரு மூன்றுதினம் மாரிமழை பொழியும்

மானிலத்தோர் தம்மைவிட்டு வறுமையென்ற தொழியும் - ஐயா"

"கழனியிலே விளைந்தசெந்நெல் உழவரரிந் தெடுப்பார்

கருதிஅளந் தடைபிரித்துக் காவலர்க்குக் கொடுப்பார் -ஐயா"

எனக் கூறுவதனூடாக நாட்டுவளமைகளின் விபரிப்பினை உணரலாம் (Vithiananthan, 1960).

## நாடகக்கட்டமைப்பும் பாத்திரப் பண்புகளும்

நாடகக் கட்டமைப்பில் பாத்திரப்பண்புகள் மூன்று அடிப்படைச்சார்ந்த பண்புகளில் அணுகப்படுகின்றன. அவை சமூகப்பண்பு, உளவியல்பண்பு, பௌதீக பண்பு ஆகிய நிலைகளில் சிலப்பதிகாரக் காப்பியக் கதையை மையமிட்டு எடுத்துரைக்கப்படுகிறது. அரங்கத்தில் நடிக்கப்படுகின்ற கதைமாந்தர்களைச் சமூகரீதியான நாட்டின் வளமையையும், வாணிகத்தின் சிறப்பையும், மன்னரின்

வெற்றிச் சிறப்பையும் மக்களின் வாழ்க்கைமுறையையும் ஒரு கோர்வையாக கட்டமைத்து யதார்த்தமுறையில் வெளிப்படுத்துகின்றனர்.

அடுத்தநிலையில் கோவலன் கண்ணகியின் மீது காதல்கொள்ளும் முறையும், கண்ணகி கோவலனை காணும் முறையையும், கோவலன் மாதவியின் நடனத்தில் மயங்கி மாதவியுடன் சென்றதும் கண்ணகி பசலையடைந்து உடல்மெலிவு ஏற்படும் காட்சியை முன்னும் பின்னுமாக உற்றுநோக்குபோது நாடகத்தின் இறுதிக்கட்டத்தில் கண்ணகி கணவனை இழந்து நிற்கதியாய், தனிமரமாய் தன் சுற்றத்தாரின்றி நிற்கும் அப்பேதை மனம்தளராமல் தன் கணவனை கொன்றவன்மீது வழக்குதொடுக்கும் காட்சியை உளவியல்ரீதியாக நோக்கும்போது அப்பெண்ணின் மன வலிமையைக் காணமுடிகின்றது. நீதியை, அறத்தை நிலைநாட்டியப் பின் வடக்குதிசை நோக்கிச்செல்லும் காட்சியை நம்மால் உணரமுடிகின்றது.

இந்நாடகத்தின் மையப்பகுதியில் கோவலனும் கண்ணகியும் மதுரைக்குச் செல்லும்பொழுது கவுந்தியடிகளின் உளவியல் பாங்கைக் காணலாம். கவுந்தியடிகள் மாதரியிடம் கண்ணகியின் வாழ்க்கை வளமையை எடுத்துரைக்கும்போது மாதரி, கண்ணகியின் மீது அன்பைக் காட்டும் விதமும் கோவலன் கொலையுண்ட பிறகு கண்ணகியின்மீது இரக்கத்தைக் காட்டும்முறையும் உளவியல்ரீதியாக உற்றுநோக்கும்போது வெளிப்படுகிறது. அவ்வாறே, கண்ணகியின் மகிழ்ச்சியான வாழ்வு திருமணத்திற்கு முன்பு காணப்பட்ட முறையும், திருமணத்திற்குப் பின்பு அவளின் இன்பம் காற்றடித்தால் மழை வருவதுபோல் நடந்துமுடிந்து, தன் கணவனுடன் சொர்க்கம் அடையக்கூடிய தன்மையும் உணர்வுரீதியான உள்ளப்பாங்கினை வெளிப்படுத்துகிறது. இப்படியாக இவ்விரண்டு நிலைகளில் சிலப்பதிகார நாடகப்போக்கு கட்டமைக்கப்பட்டுள்ளன.

## கண்ணகியின் பிறப்பு

புகார்நகரத்தில் வறுமையில் வருந்தும் ஏழை மக்கள்களுக்கு உதவிபுரியும் மனம் கொண்ட மாநாய்கன் என்ற ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் அழகிய பூங்கொம்பு போன்ற ஒரு பெண்மணியைப் பெற்று நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தான். செந்தாமரையில் வீற்றிருக்கும் திருமகளுக்கு ஒப்பானவளாக திகழ்கின்ற, ஆசிலாக் கற்புடைய அருந்ததியின் திறம் இவள் கற்பை ஒக்குமென்று போற்றிப் புகழ்ந்து பாடும் ஒப்பற்ற அழகும், உயர்ந்த கற்பும் குணமும் கொண்ட மாது கண்ணகி என்னும் பெயர் பெற்றுப் பன்னிரண்டு ஆண்டமைந்த இளங்கொடியாய் விளங்குகினாள்.

## கோவலனின் பிறப்பு

அந்த பூம்புகார் நகரிலே மாசாத்துவான் என்னும் பெயருடைய மற்றொரு வணிகன் வாழ்ந்து வந்தான். மிகப் பெரிய செல்வம் கொண்ட வணிகன். நல்வழியால் தான் ஈட்டிய பொருளையெல்லாம் வறியவர்களுக்கு வாரி வழங்கும் உள்ளம் கொண்ட வணிகனுக்கு செவ்வேள் போன்ற அழகிய இளமையும், செம்மையும் வாய்ந்த அறிவாலும், குணத்தாலும் புகழ்பெற்ற கோவலன் என்னும் பெயர் பெற்றுப் பதினாறாண்மைந்த குமரனாய் விளங்கினான்.

## கோவலன் கண்ணகியின் திருமணம்

ஒரு நன்னாளிலே இவ்விருவரது பெற்றோர்களும் கோலவனுக்கும் கண்ணிகிக்கும் மணஞ்செய்து வைக்க எண்ணினார்கள். அவ்வாறே திருமணத்திற்குரிய நன்னாளைக் குறித்து அந்நகரிலே திருமணத்திற்கான முரசு அடிக்கவும், மத்தளம் அடிக்கவும், முழங்கு கருவிகள் முழங்கவும், மங்கள வாத்தியங்களின் முழக்கமும் சேர்ந்து அந்நகரிலுள்ள மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்திலே மூழ்கியிருந்தனர்.

“மாலைதாழ் சென்னி வயிரமணித் தூணத்து

நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்”

திருமணக்கோலங் காண வருகைப்புரிந்து இருக்கின்ற மணியும் ஒளியும் போலவும், மலரும் மணமும் போலவும், ஒருவரை ஒருவர் பிரியாமல் பல்லாண்டு வாழ்க என வாழ்த்தி நறுமலர் தூவினார்கள். அரங்கத்தின் நடுவிலே உற்றார் உறவினர் சுற்றம் சூழ திருமண நிகழ்ச்சி நடைபெறுகிறது (Swaminatha iyer, 2018).

கோவலன் கண்ணகியைப் புகழ்ந்து பாராட்டுதல்

“மாசறு பொன்னே வலம்புதி முத்தே

காசறு விரையே கரும்பே தேனே

அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே

பெருங்குடி வாணிகன் பெருமட மகளே

மலையிடைப் பிறவா மணியே என்கோ

அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ

யாழிடைப் பிறவா இசையே என்கோ”

என்று கோவலன் தன் கண்மனியான கண்ணகியை பலவாறாக நலம் புனைந்துரைத்தான். இவ்வாறாக இருவரையும் தனியாக ஒரு மாளிகையில் வாழ்ந்து வரச் செய்தாள் கோவலனின் நற்றாய். இல்லற வாழ்க்கையில் இருவரும் சில ஆண்டுகளே இன்புற்றுக் களித்து வாழ்ந்தனர் (Puliyur Kesigan, 2015).

## அரங்கேற்றக்காதையில் மாதவி அறிமுகம்

“பலவகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்தப்

பதினோ ராடலும் பாட்டுங் கொட்டும்”

இப்பாடலின் வழியாக மாதவி என்னும் நடனம் ஆடும் மாது தாது அவிழும் மலர்களையும், குழன்று சுருண்ட கூந்தலையையும், மாந்தளிர் போன்ற மேனியையும் உடைய ஆடல் பாடல் அழகென்னும் மூன்றில் ஒன்றும் குறைபடாத பெண்ணொருத்தி வீரக்கழல் அணிந்த சோழனது சபையில் தனது ஆடலையும் பாடலையும் அரங்கேற்றினாள். இவள் நாட்டிய நன்னூல் கூறும் விதிகளுக்கு அமைய ஆடலை நன்கு பயின்ற மாதவி தன் பதினொரு வகையான ஆடலை அரங்கேற்றம் செய்கின்றாள். நாடக அரங்கத்தில் உள்நுழையும்போது தன் வலது கால் முன் வைத்து ஆடல் அரங்கு ஏறினாள். பாட்டிசை, குழல் இசை, கைத்தாள இசை ஆகிய ஐந்து வகையான இசைக்கு ஏற்ப மாதவி இப்பதினொரு வகை ஆடல்களை ஆட முற்படுகிறாள் (Puliyur Kesigan, 2015).

சிவனாகவும், முருகனாகவும், கண்ணனாகவும் ஆடிய மாதவி மன்மதன், அயிராணி, திருமகள், கொற்றவை ஆகியோராகவும் ஆடினாள். ஒவ்வொரு கதாபாத்திரங்களுக்கேற்ப ஆடை, அலங்காரங்கள் அணிந்து உணர்ச்சி நயத்துடன் தொல்காப்பியரின் எட்டுவகையான மெய்ப்பாடுகளையும் தனக்குள் ஏற்று, உணர்ச்சி ததும்ப ஆடினாள். இவ்வாடலைக்கண்ட சோழ மன்னன் 1008 கழஞ்சு பொன் பரிசையும், பச்சை மாலையையும் பரிசாகக் கொடுத்ததோடு ‘தலைக்கோலி’ என்னும் உயர்ந்த பட்டத்தையும் அளித்தான்.

## மாதவியின்மீது கோவலன் காதல் கொள்ளுதல்

அரங்கேற்றத்தில் மாதவியின் நடனத்தைக் கண்ட கோவலன் அவள்மீது காதல்கொண்டு ‘மாற்றுயர்ந்த பசும்பொன்னை விலையாகப் பெற்று மாதவியை மணந்தான். அவள் மையலிலே

தாழ்ந்தான். மாசிலாக் கற்புடைய தன் மனையாளையும் மாளிகையையும் மறந்தான். மல்லிகை முல்லை மலர்கள் மணங்கமழ்ந்தன. கதிரவன் மறைந்து குளிந்த கலைகளையுடைய சந்திரன் விண்ணிலேத் தோன்றிய நேரங்களில் கோவலனும் மாதவியும் நிலா முற்றத்தில் இனிதமர்ந்து இன்புற்றிருந்தார்கள்.

இங்ஙனம் காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரனுக்குத் திருவிழாக் கொண்டாடும் நன்னாள் வந்தது. அவ்விழாவைக் காண இவ்விருவரும் சென்று விழாவினைக் கண்டு இன்புற்றுப் பிறகு மாதவியும் கோவலனும் கடற்கரைக்கு வந்து சேர்ந்தார்கள். அங்குத் தாழை வேலியாற் சூழ்ந்த வெண்மணல் விரிந்த இடத்தில் ஒரு புன்னை மரத்தின் நிழலில் இருவரும் அமர்ந்திருக்கையில் மாதவி தன் தோழி வசந்தமாலையின் கையில் உள்ள யாடை வாங்கி அதனை முறைப்படி திருத்திக் கோவலன் கையில் கொடுக்க கோவலன் மனமகிழ்ந்து கானல்வரி பாடத் தொடங்கினான். இவ்வாறு கோவலன் பாடிய பாக்கள் அகப்பொருளியலில் களவுத் துறையில் தலைமகன் கூறிய மொழிகளாயிருந்ததால், கோவலன் தன் மேல் அன்பில்லாதது வேறொரு காதலியை விரும்பி மயங்கினான் என்று மாதவி எண்ணி அக்கருத்தை வெளிப்படுத்தாமல் அவன் கையிலுள்ள யாழை வாங்கித் தானும் வேறு குறிப்புக்கொண்ட "நிலத்தெய்வம் வியப்பெய்த, நீள்நிலத்தோர் மனமகிழ" என்று மாதவி இன்னிசை பாடினாள். இப்பாட்டைக் கேட்ட கோவலன் என்னை யன்றி வேறொருவன் மேல் மனம் வைத்து மாயப் பொய் பல கூட்டும் மாயத்தவளாகிய மாதவி பாடினாள் என்று எண்ணி, கோபப் குழயோடெழுந்து அவளை விட்டுப் பிரிந்து தன் மனை நோக்கிப் புறப்பட்டான்.

## கோவலன் கண்ணகி புகார்நகரைவிட்டுப் பாண்டியநகரை நோக்கியப் பயணம்

கோவலன் கூடாவொழுக்கத்தில் இருந்து மீண்டு தன் மனையில் இருக்கும் காதலியின் வாடிய மேனியையும் வரந்திய மனத்துடன் நிற்கும் கண்ணகியைக் கோவலன் கண்டான். கற்பிற் சிறந்த கண்ணகியைப் பார்த்து "பொருளையே விரும்பும் பொது மாதின் பொய்யொழுக்கத்தை மெய்யென்று நம்பி மோசம் போனேன் என் குலத்தோர் சேர்த்து வைத்த அரும் பொருளையெல்லாம் அவள் பொருட்டு அழித்தேன் இப்பொழுது வறுமையுற்று நாணுகின்றேன்" என்று கோவலன் கூறக் கேட்ட கண்ணகி இன்னும் மாதவிக்குக் கொடுக்கக் கையில் பொருளில்லாமையால் இவ்வாறு தன் கணவன் மனம் நொந்து வருந்துகின்றான் என்று எண்ணி, "ஐயனே இன்னும் என்னிடத்தில் இரண்டு சிலம்புகளிருக்கின்றன. அவற்றை இதோ தருகின்றேன்" என்று முகமலர்ந்து கூறுவதைக் கேட்ட கோவலன் அவளுக்கு இழைத்த தீமைகளை நினைத்து நெஞ்சம் குழைந்து "என் கண்மணி, நீ சொல்லிய சிலம்பை விற்று அப்பொருளையே மூலப்பொருளாக வைத்து வாணிகம் செய்து நான் இழந்த பொருளை மீண்டும் சேர்க்க எண்ணியிருக்கின்றேன் அதற்காக இவ்விடம் விட்டு மதுரை மாநகரத்திற்கு நாம் செல்லவேண்டும், நீயும் என்னோடு புறப்படு" என்று கூறினான்.

கண்ணகியும், கோவலனும் பெருமைசேர்ந்த வீட்டை விட்டுப் பெயர்ந்தார்கள். கண்ணகி பல நாள் அன்பு செலுத்தி வளர்த்த கவரிமானையும், அன்னப்பறவையும் புறத்தே விட்டுப் புறப்பட்டாள். கொடி போன்ற இடையை உடைய கண்ணகி கதிரவனின் வெப்பத்தால் உடல் முழுவதும் சோர்ந்து, வண்ணச் சீரடிகள் வருந்தி நோவுற்றன. கண்ணகியின் துயரைக் கண்ட கோவலன் ஒரு குளிந்த மர நிழலில் சற்று இளைப்பாறி விட்டுச் செல்வோம் என்று கூற அப்போது கண்ணகி தனது இனிய மழலை மொழிகளால் "மதுரை மூதூர் எங்கிருக்கின்றது" என்று தன் காதலனிடம் கேட்க கோவலன் மிகவும் மனம் வருந்தி "இதுவரையும் நாம் ஒரு காத வழி வந்துவிட்டோம். இன்னும் முப்பது காதம் இருக்கின்றது" என்று மொழிந்தான்.

## கவுந்தியடிகளைக் காணுதல்

அச்சோலையின் ஒரு பக்கத்தில் கவுந்தியடிகள் தவஞ்செய்து கொண்டிருந்தார். அப்பெரியவரைக் கண்ட இவர்கள் வணங்கினார்கள். அவர்களைக் கண்ட அடிகள் வியப்படைந்து "அழகும் குலமும் ஒழுக்கமும் வாய்ந்த நீங்களிருவரும் துன்பத்தால் நலிந்தாரைப்போல வீட்டை விட்டு

வெளியேறியதற்குக் காரணம் என்ன” என்று கேட்க அதற்குக் கோவலன், “அடிகளே, பொருள் தேடும்பொருட்டு மதுரை மாநகரத்திற்குச் செல்கின்றோம்” என்று கூற இதைக் கேட்ட அடிகள் ஐயோ மதுரை மாநகரத்திற்கு செல்ல இன்னும் நெடுந்தூரம் இருக்கின்றதே. நாட்டுவழியாகவும், காட்டுவழியாகவும் செல்லலாம் “நானும் செந்தமிழ் பயிலும் மதுரையில் சென்று அறவுரை கேட்டுக் ஆர்வமுடையேன். ஆகையால் நானும் உங்களுடன் வருகிறேன்” என்று கூறினார். இச்செய்தியைக் கேட்ட இவ்விருவரும் மனம் மகிழ்ந்து மூவரும் மதுரைக்குப் புறப்பட்டனர்.

மதுரை மாநகர் நோக்கி மூவரும் பயணம் மேற்கொள்ளும் போது காவிரியாற்றின் நீர் வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடக்கூடிய காட்சியும், செந்நெல், கரும்பு நிறைந்த வயல்கள் சூழ்ந்த பகுதிகளும், தடாகங்களில் அழுகுற மலர்ந்த தாமரையின் இனிய காட்சியும், நீர்நிறைகளைச் சூழ்ந்த அன்னம், கொக்கு, கோழி, நாரை, ஊரல், புள் ஆகிய பறவையினங்கள் ஒலிக்கும் ஆரவாரமும், வயல்பகுதிகளை உழுதுகொண்டு ஏர்மங்கலப் பாட்டினைப் பாடிக்கொண்டு தன் களைப்புத் தெரியாமல் வேலை செய்பவர்களையும், முற்றிய கதிரை அறுத்துக் களத்திலிட்டு நெல்லைக் குவித்து அளப்பவர்கள் பாடும் முகவைப் பாட்டின் முழக்கத்தையும் கேட்டுக்கொண்டு அம்மூவரும் அவ்வழியாக நடந்தனர். இவர்கள் வரும் வழியில் இவற்றையெல்லாம் கண்டதால் நடைப்பயணக் களைப்பு நீங்கியது.

காவிரியாற்றைக் கடந்து செல்லும்போது மாடலமறையோனைக் கண்ட கோவலன் மதுரை மாநர்க்கு செல்லும் வழி யாது என வினவ மறையவன் “ஐயோ சூரியனுடைய வெம்மை சிறிதும் பொறுக்க முடியாத இயற்கையும் நிலை குலைந்து நிற்கின்றது. மரமும் செடியும் செழித்து வளரும் மலைநாடு, புல்லும் கொடியும் படர்ந்து நிற்கும் முல்லை நிலமும் பாலை நிலம்போலப் பாழாகத் தோன்றுகின்றன என்பதை,

“முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
நல்கயல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவங் கொள்ளும்” (Natarajan, 2015)

“முல்லை முதலாச் சொல்லிய முறையால்” (Nachinarkiniyar, 2012)

இக்கொடிய வேனிற்காலத்தில் இளங்கொடி போன்ற இப்பெண்ணோடு இங்கு வந்தீரே, பாவையும் பருங்கல்லும் பேய்த் தேரையும் நிறைந்த இக்காட்டு வழியைக் கடந்து போய், கொடும்பாளும், நெடுங்குளம் என்னும் இரண்டு ஊர்களுக்கும் மத்தியிலுள்ள ஏரிக்கரையைக் கடந்து சென்றால், வழிச்செல்வோர் மயங்கும்படி சூலாயுதம் போன்று மூன்று கவராகப் பாதை பிரியும். வலது பக்கமாய்ப் பிரிந்து செல்லும் வழியே போனால், வெண்கடம்பும் வாழையும் மூங்கிலும் கரிந்து கிடக்கும். அது கடத்தற்கரிய அடர்ந்த காட்டுப்பகுதியாகும்.

வலப்பக்கம் செல்லாமல் இடப்பக்கமாகச் சென்றால் நீர்நிறைந்த தடாகங்களும் வயல்களும், பூஞ்சோலைகளும் இருக்கும். அவ்வழியாகச் செல்லும்போது திருமால் குன்றம் வரும். அக்குன்றத்தில் பூமிக்குள்ளே செல்லும் வழியுமுண்டு என்று மறையவன் கூறுகின்றான்.

இவ்வாறாக மறையவன் கூறியதைக் கேட்டு அம்மூவரும் நடக்க ஆரம்பித்தனர். காட்டின் கொடுமைகளை நினைத்துப் பாடிக்கொண்டே நடக்கும் பொழுது மதுரை தென்றல் அவர்களின் மீது பட்டவுடன் மதுரை மாநகர்க்கு வெகுதூரமில்லை என்று ஒருவர் கூறக் கேட்வுடன் ஒருவாறு ஆறுதல் அடைந்து மூவரும் வழக்கம்போல் இரவில் வழி நடந்து சென்றார்கள். மதுரை மாநகர்க்கு அருகில் வரும்பொழுது பிறவாத பெருமையையுடைய சிவபெருமான் கோவிலில் எழும் அந்தணரது வேள்விப் புகையால் சூழப்பட்டு மஞ்சு சூழ்ந்த மலைபோல மாண்புறத் தோன்றும் காட்சியை மூவரும் பார்க்கும்போது மதுரை மாநர்கருக்கு அருகில் வந்தது அவர்களுக்குப் புலப்பட்டது. காற்றின் மூலமாக ஊடுருவி வரும் அரசனனின் பெருமை சார்ந்த காலை முரசங்கள் அதிர்ந்து ஒலித்தன. நான்மறை பயின்ற அந்தணர் நவின்ற மறையின் ஒலியும், மாதவர் ஓதிய மந்திர ஒலியும், மங்கலமாக ஒலித்தன. யானைகள் முழங்கும் ஒலியும், புரவிகள் ஒலியும், மருத நில மக்கள் காலையில் கொட்டும் பறை ஒலியும், கடலொலி போலக் காதில் பட்ட பொழுது முன்னடைந்த துயரமெல்லாம் நீங்கி முன்போல்

மூவரும் அகம்மகிழ்தனர். கோவலன் கவுந்தியடிகளிடம் வினைப் பயனால் தனக்கு நேர்ந்ததை எடுத்துரைத்ததும் அப்போது கவுந்தியடிகள் "அறிவிற் சிறந்த நல்லோர் தமக்கு நேர்ந்த துன்பங்களைத் தாம் செய்த வினையின் பயனே என்று அறிந்து பொறுமையோடு தங்கி இங்கு வாழ்வார்கள். ஆதலால் உன் துன்பங்களெல்லாம் தீர்ந்து கண்ணகியைப் பிரியாது வாழும் பெருமைந்து இம்மாநகரில் வாழ்வாயாக என்று ஆறுதல் கூறி மனம் தேற்றினார்.

## கவுந்தியடிகள் கண்ணகியை மாதரியிடம் அடைக்கப்படுத்துதல்

கவுந்தியடிகள் கண்ணகியை மாதரியிடம் அடைக்கலமாகக் கொடுத்து அவளது கற்பின் பெருமையையும் கண்ணகியின் குலப்பெருமையையும் கூறி விட்டுச்சென்றான். ஆயர்குலத்தில் பிறந்த மாதரி முதுமகள் தெய்வத்தை தன் குலத்தெய்வமாக வழிபடக்கூடியவள். கவுந்தியடிகள் சொல்லைக் கேட்ட அப்பெண் கண்ணகிக்கு அடைக்கலம் கொடுக்க விளைந்தாள். கண்ணகிக்கு நல்ல தோழியாகத் திகழக்கூடிய மாதரி அன்றைய மாலைப்பொழுதில் நல்ல நீரில் அவளை நீராடச்செய்து, கண்களில் மையெழுதி, கருங்கூந்தலில் நறுமலர்சூடி, தூய நல்லாடையை அணிவித்து பின் கண்ணியை நலம்பாராட்டுகிறாள். "அழகிய நங்காய், உன்னை நான் பொன் போல் போற்றிக் காப்பேன். நீ எதற்கும் அஞ்சவேண்டாம் வழியில் நேர்ந்த துயரமெல்லாம் நீக்கி ஏதுமற்ற இவ்விடத்தில் உன்னைக் கொண்டு சேர்த்த கணவனுக்கு இனி யாதொரு கவலையுமில்லை" என்று சொல்லித் தேற்றினாள்.

## கண்ணகி கோவலனுக்கு இனிதமுதான உணவு படைத்தல்

கோவலனுக்குக் கண்ணகி தன் காந்தல் மலரினும் மெல்லிய அவள் கைவிரலால் காய்களை அரிந்து தன் காதலனுக்கு நல்லுணவு ஆக்கினாள். கோவலன் உணவு உண்பதற்கான மஞ்சனம் அமைத்து கோவலனை அதில் அமரச்செய்து குறுத்து வாழை இலை விரித்து தன் கையால் செய்த உணவை பரிமாறினாள். கோவலன் அந்நல்லமுதை உண்டான். கண்ணகியை பலவாறாகப் பாராட்டிய கோவலன், கண்ணகி கொடுத்த மெல்லிய வெற்றிலைச் சுரளும் அடைக்காயும் இணைத்து மென்றுக்கொண்டிருந்தான். அப்போது கோவலன் தன் காதலியை அழைத்து என் கண்ணே என பலவாறாகப் புகழ்ந்து பாராட்டிக் கொண்டிருந்தான். கோவலன் கண்ணகியை கொடியே! புனை பூங்கோதாய்! நாணன் பாவாய்! நீள் நில விளக்கே! கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வி! உன் சீறடிச்சிலம்பில் ஒன்றைத் கொண்டு நான் மாட மதுரையில் விற்று வருகிறேன் என்று சொல்லித் தன் காதலியை அன்போடு அணைத்தான். கண்ணகி உடன் துணையாரும் இல்லாததை நினைத்து மனம் வருந்தி காதலி தன் கண்ணீரை கண்டாள் மனம் வருந்துவாள் என்று நினைத்து வீட்டைவிட்டு வெளியேறிவிட்டான். இந்தப் பிரிவு அவள் வாழ்க்கை முழுவதும் நீண்டு விடும் என்று நினைத்து மனம் கலங்கினானோ என்னவோ என்பதை இக்காப்பியம் உணர்த்துகிறது.

## கோவலன் தட்டான் உரையாடல்

கோவலன் மன்றங்கள் நிறைந்த அங்காடித் தெருவில் அங்குமிங்கும் பார்க்கையில் மன்னனனால் மதிக்கப்பெற்ற பொன் விலைக்கொல்லன் என்று நினைத்து "அரசனது தேவி அணிவதற்கு ஏற்ற ஒரு சிலம்பை விலை மதித்தற்கு நீ வல்லையோ" என்று கேட்டான். அதற்கு அத்தட்டான் "அடியேன் மாதருடைய அடிக்கலத்திலன் விலை மதித்தற்கு அறியேன். ஆயினும் அரசரது முடிக்கலன் முதலிய அணிகள் செய்யும் ஆற்றல் உடையேன்" என்று மொழிந்தான். கோவலன் தன்னிடம் உள்ள சிலம்பைத் தட்டானிடம் காட்ட பசும்பொன்னில் மாணிக்க மணியோடு வயிரம் பொருத்தப்பட்ட சிலம்பை ஆராய்ந்ததும் தட்டான் கோவலனை அமரச்செய்து தான் திரும்பி வரும்வரை இங்கே இரு என்று கூறிவிட்டு தட்டான் அரண்மனையில் உள்ள மன்னனிடம் கூறுவதற்காக விரைந்தான்.

## கோப்பெருந்தேவியின் தீக்கனா

சிலப்பதிகாரத்தில் பாண்டிமாதேவி அவல நிலையை மன்னனிடம் கூறிக்கொண்டிருந்த தருணத்தில் தட்டான் கண்டு அடிதொழுது "அரசே கன்னக்கோலும் கவைக் கோலும் இல்லாமல், துயில் மந்திரத்தையே துணையாகக் கொண்டு காவலாளரது கண்களை மயக்கி அரண்மனைச் சிலம்பைக் கவர்ந்து கொண்ட கள்வன் என் சில்லைச் சிறுகுடிசையில் அகப்பட்டிருக்கின்றான்" என்று தட்டான் சொன்னவுடன் காவலாளரைக் கூவியழைத்து "அரசமா தேவியின் காற்சிலம்பு கள்ளன் கையில் காணப்பெற்றால் அவனைக் கொன்று கொணர்க" என்ற ஆணை பிறப்பித்ததும் காவலாளர்கள் கொல்லையில் இருந்த கோவலனைக் கண்ட காவலாளர்கள் குற்றமறியா முகத்தைக் பார்த்து கொல்வதற்கு மனமின்மையால் தங்களுடைய எண்ணங்களிலுருந்து பின்னடைவதைக் கண்ட தட்டான் கள்வர்கள் பல தந்திரவாதிகள் அவர்கள் இப்படித்தான் முகப்பாவனைகளை வைத்துக்கொள்வார்கள் என்று காவலாளர்களின் மனதை குழப்பம்செய்து முன்னொரு காலத்தில் தந்திரங்கள் கொண்ட கள்வர்களின் பல கதைகளைக் கூறி கோவலனை கொலை செய்யத்தூண்டி கொலை செய்யவைத்தான் (Chellappan, 1994).

## கண்ணகியின் புலம்பல்

மாதரி கோவலன் கொலையுண்ட செய்தியைக் கேட்டதும் நெஞ்சம் துடித்தவளாய் மனம் கலங்கியவளாய் கண்ணகியை காண விரைந்தாள். அப்பொழுது ஐயையிடம் கோவலனுக்கு நேர்ந்ததை மாதரி கூறினாள். கண்ணகி தன் கணவன் வராததைக் குறித்துத் ஐயையிடம் புலம்பிக் கொண்டிருக்கும் மான் போன்ற நெற்றியை உடைய பெண்ணுக்கு நேர்ந்ததை நினைத்து தனக்கள் புலம்பிக்கொள்ளும் பொழுது கண்ணகியின் துயரத்தைக் கண்டு மனம் பொறாதவளாய் அவளைப் பார்த்து அரண்மனையில் களவு போன சிலம்பைக் கோவலன் "களவாடினான் என்று அவனை அரசனது காவலாளர் கொலை செய்தார்கள்" என்றாள். கொலை என்ற சொல் செவியில் விழுந்ததும் கண்ணகி பொங்கி எழுந்தாள், விழுந்தாள், அழுதாள், புலம்பினாள், 'என் தலைவா! நீ எங்கே சென்றாய்' என்று ஏங்கி மயங்கினாள். உன் அன்பை இழந்த பாவியானேன் ஐயோ! என்று கூறி வானத்தில் சுடரொழியாக எரியும் கதிரவனைப் பார்த்து "ஏ! காய்கதிர்ச் செல்வனே! நீ அறியாத பொருள் இவ்வுலகில் ஒன்றுமில்லையே! நீ யறிய என் கணவன் கள்வனோ? என்று முறையிட்டாள்!" ஆதவனும் அசரீரியாய் நின்று ஆயர் குல மக்களெல்லாம் கேட்கும்படி, "மாதே உன் கணவன் கள்வனல்லன். அவனைக் கள்ளவன் என்ற கொன்ற இவ்வூர் தீயினால் அழியும்" என்று கூறிய குரல் ஆகாயத்தில் எழுந்து மறைந்தது.

## கண்ணகி வழக்குரைத்தல்

பாண்டிமா தேவி தான் கண்ட தீக்கனாவை மன்னனிடம் உரைத்துக் கொண்டிருக்கும் நேரத்தில் அரண்மனை வாயிலில் வாயிற்காப்போனிடம் 'ஒற்றைச் சிலம்பைக் கையிலேந்தி கணவனை இழந்த கடையகத்தாள் அரண்மனை வாயிலில் நிற்கின்றாள்" என்று கூறு என்றாள். அப்படியே வாயிற்காப்போனும் மன்னிடம் தான் கண்டக் காட்சியை அறிவித்தான். அரசன் அப்பெண்ணை உள்ள வரும்படி ஆணைப்பிறப்பித்தான். கற்பெனும் திண்மையும் உடைய கண்ணகி அரசன் கண்ணெதிரே வந்து நின்றாள். தலைவிரிக்கோலமாக மனம்கலங்கி "என் முன் வந்து நிற்கும் மாதே நீ யார்?" என்று கேட்க அதற்குக் கண்ணகி "தேரா மன்னனா, செப்புவது உடையேன்" என்று உரைத்துவிட்டு தான் பிறந்த நாட்டின் சிறப்பையும் நாட்டு மன்னனின் வளமையையும் தன் குடிப்பிறப்பையும் கூறிவிட்டு கொலை செய்யப்பட்ட கோவலன் மனைவியே நான் என் பெயர் கண்ணகி என்றாள்.

இதைக்கேட்ட காவலன் "பெண்ணணங்கே, கள்வனைக் கொல்லுதல் கொடுங்கோலன்று அது நீதி முறையேயாகும்" என்று மொழிந்தான். இதைக்கேட்ட கண்ணகி கடுஞ்சினம் கொண்டு "அரசே! என் கணவன் குற்றமற்றவன் என்று நிறுவும் பொருட்டே இங்கு நான் வந்தேன். என் சிலம்பின் உள்ளே அமைந்திருக்கும் பரல் மாணிக்கம்" என்றாள். அரசன் கையில் உள்ள சிலம்பில் இருப்பதோ முத்து பரல் என்று கூறி கண்ணகி முன் எடுத்து வைக்க தன் கையில் உள்ள அச்சிலம்பை உடைத்தாள். அதன்

உள்ளே இருந்த மாணிக்கம் பீறிட்டு எழுந்து மன்னவன் வாயில் தெறித்தது. மாணிக்கத்தை கண்ட மன்னன் தன் செங்கோல் தளர்ந்ததை நினைத்து தட்டான் சொல்லைக் கேட்டு முறை தவறிய நானோ அரசன்! இல்லை கோவலன் உயிரைக் கவர்ந்த கள்வன்! கோவலன் கள்வனல்லன். இதுவரை என் நாட்டில் நீதி எக்காலத்திலும் தவறியதில்லை. இப்பொழுது என்னால் நீதி பிழைத்தது. இனி நான் உயிர் வாழ மாட்டேன் என்று சொல்லி மயங்கி விழுந்து உயிர்துறந்தான்.

## வஞ்சிநோக்கியப் பயணம்

இவ்வாறு மதுரை மாநகரம் எரிந்து அழிதலும் பாழ்பட்டது. வினைப்பயன் காரணமாக கண்ணகி மதுரையை எரித்து விட்டு நீங்கி வைகையாற்றின் கரை வழியாக மேற்குதிசை நோக்கிச் சென்று மலை நாட்டையடைந்து அங்குள்ள மலைமீதேறி ஒரு வேங்கை மரத்தின் நிழலில் வந்து நின்றாள். அங்குள்ள சேரநாட்டு குன்றக் குறவர்கள் தம் திணைப்புனைத்தைக் காத்துவிட்டு அருவியில் நீராடிவிட்டு வரும்வழியில் வேங்கை மரத்தின் நிழலில் வள்ளிபோன்ற வனப்பமைந்த ஒரு மாது நிற்பதைக் கண்டு அம்மாதுவின் மனவருத்தமடைந்து முகம் காட்சியளிப்பதைக் கண்ட குறவர்கள் அவ்வம்மையாரிடம் சென்று "அம்மையே, நீர் யார்?" என்று வினவினார்கள். அதற்கு கண்ணகி "வல் வினையால் மதுரைமாநகரில் கணவனை இழந்த கடுவினையேன் யான்" என்று கூறினாள். இதைக் கேட்ட குறவர்கள் அம்மையாரைத் தொழுது வேண்ட வானில் இருந்து வந்து இறங்கிய விமானத்திலேறி அவள் கோவலனுடன் விண்ணுலகம் சென்ற காட்சியை நாடகத்தின் வாயிலாக நாம் காணலாம். குறவர்கள் கூறக்கேட்ட சேரன் செங்குட்டுவன் பத்தினி தெய்வமான கண்ணகிக்கு கோவில் எழுப்பி சித்திரா பௌர்ணமி அன்று திருவிழா எடுத்து கொண்டாடப்படுவதாக வரலாறு கூறுகின்றது.

## முடிவுரை

உலகம் போற்றும் நாடக அமைப்பாக சிலப்பதிகாரக் காப்பியம் அமைந்துள்ளது. அரங்கத்தின் ஊடாக கதைமாந்தர்கள் கதைக்குத் தகுந்தாற்போன்று வேடமிட்டு உணர்வுப்பூர்வமாக மக்கள் மத்தியில் பத்தினிப்பெண்ணான கண்ணகியின் வாழ்க்கைக் குறிப்புகளை நடித்துக்காட்டுகின்றனர். இல்லற வாழ்க்கையில் அவள் அடியெடுத்து வைப்பதும் அதன் பிறகு மாதவியினுடன் கோவலன் சென்ற பின் அவள் படும்வேதனையையும் மீண்டும் மாதவியை விட்டு கண்ணகியிடம் வரும் பொழுது மனமகிழ்ந்து இல்வாழ்க்கையில் மகிழ்ச்சியாக வாழப்போகிறோம் என்ற எண்ணத்தில் கோவலனுடன் மதுரை மாநகரம் வரும் காட்சியையும் மிக அழகாக அண்ணாவியார் எடுத்துரைக்கிறான். நாடகம் நிகழ்ந்துகொண்டிருக்கும் போது இடையிடையே கட்டியங்காரன் ஒவ்வொரு கதைமாந்தர்களையும் அழைப்பதும் பாட்டுப்பாடுவதும் உண்டு. கோவலன் மதுரையில் கொலை செய்யப்பட்டு கிடப்பதைக் கண்ட கண்ணகி பாண்டியனிடம் வழக்குத்தொடுப்பதை கட்டியங்காரன் மிக அழகாக மன்னனை வாழ்த்திப் போற்றுவதும் அதன் பின் கண்ணகி வந்த செய்தியை உரைப்பதுமாக இக்காப்பியம் முழுமையும் கட்டியங்காரன் போக்கிலும் உரையிலும் உள்ளது என்பதை நாம் அறிவோம். இக்காப்பியக்கதையை அண்ணாவியார் ஒவ்வொரு கதைமாந்தர்களிடம் அவர்களுக்குரிய கதையை படிப்பித்துக்காட்டுவதும் அவர்களுக்குப் பயிற்சியளிப்பதும் அண்ணாவியாரின் தலையாயப் பணியாகும். ஒரு நாடகத்தில் கதைமாந்தர்களைவிட கட்டியங்காரன் மற்றும் அண்ணாவியாரின் பங்களிப்பு மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. வாய்வழியாகக் கூறி செவிவழியாக கேட்டறிந்த கண்ணகி கோவலனின் வாழ்க்கை முறைகளை உலகம் முழுவதும் கொண்டுசென்றவர்கள் நாடகத்தார்கள். நாடகத்தார்கள் இக்கதையை கொண்டு சென்றதாலேயே கண்ணகியை தெய்வமாக மக்கள் வழிபடுகின்றனர் என்பதில் ஐயமில்லை.

## References

Chellappan, K. (1994) Silapathikaram Theylivurai, Saratha Publication, Chennai, India.

Nachinarkiniyar, (2012) Tholkappiyam Porulathigaram, Saratha Publication, Chennai, India.

Natarajan, TS. (2015) Silappathigaram Maruvaasippu, New Century Book House, Chennai.

Puliyur Kesigan, (2015) Silapathikaram, Saradha Pathippagam, Chennai, India.

Swaminatha iyer, U.V. (2008) Silapathikara Moolam and Arumbathaurai and Nallarurai to Adiyar, U.V. Sa. Libray, Chennai, India.

Vithiananthan, S. (1962) Ankararuban Natak Thenmodik Koothu, Srilanka.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License